**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.283/2023**

வாதி சாட்சி 1 முத்துராஜ் த/பெ.தங்கவேல்

14.03.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திரு.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 முத்துராஜ் அனுமதியின் பேரில் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

தாவாவில் என்ன பரிகாரம் வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் என் தந்தை எழுதிவைத்த உயிலை அனுமதிக்கவேண்டும் என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டும் என்றும் கேட்டுள்ளேன். தாவா சொத்துக்கள் என் தந்தைக்கு எப்படி பாத்தியம் என்றால் என் தந்தை கிரையம் வாங்கினார். தாவா சொத்தில் என் தந்தை இறப்பதற்கு முன்பு வரை அவர் தான் சுவாதீனம் செய்துவந்தார் என்றால் அவரும் நானும் கூட்டாக சுவாதீனத்தில் இருந்தோம். அப்படி நானும் என் தந்தையுடன் கூட்டுசுவாதீனத்தில் இருந்து இருந்தால் என் பெயரும் அடங்கலில் பதிவாகி இருக்கும் என்றும் ஆனால் அடங்கலில் என் பெயர் இல்லை என்றும் அதனால் தான் அடங்கல் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, அடங்கல் பெற்று என் வழக்கறிஞரிடம் கொடுத்து தாக்கல் செய்திருக்கிறேன்.

உயில் எந்த இடத்தில் யாரால் எழுதப்பட்டது என்றால் என் வீட்டில் வைத்து சுப்புராயன் என்பவர் உயில் எழுதினார். அந்த உயிலில் எழுதியவர் யார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, எழுதியவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் யார் என்றால் என் ஊரைசேர்ந்த குமாரசாமி என்பவரும் புதுவையை சேர்ந்த குஜிலாபதி என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார்கள். இருவரும் தற்போது உயிரோடு இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். உயிலை எழுதியவர் எந்த ஊர் என்றால் புதுவை. அந்த உயிலை பதிவு செய்யவில்லை

என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் தந்தை 27.02.2003 தேதியில் என் பெயருக்கு உயில் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றும் அந்த உயில் நானே தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் இருக்கும் விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வங்கியில் கடன் வாங்க நான் நடவடிக்கை எடுத்தபோது உயில் விவரம் தெரியவந்தது. எந்த வருடம் உயில் பற்றி எனக்கு விவரம் தெரிந்தது என்றால் வங்கியில் அடமான கடன் வாங்குவதற்கு நான் 2004 அல்லது 2005ம் ஆண்டு முயற்சி செய்த போது உயில் விவரம் தெரியவந்தது.

என் தந்தையை எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை நான் பராமரித்து வந்தேன் என்றால் என் தந்தை இறக்கும் வரை நான் தான் அவரை பராமரித்து வந்தேன். என் தந்தை எந்த நோயினால் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் நரம்பு பாதிப்பு சம்மந்தமான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். என் தந்தை எந்தந்த மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் முதலில் கண் சம்மந்தமான பாதிப்பிற்கு கடலூரில் கண்ணன் மருத்துவமனையிலும் பிறகு நரம்பு சம்மந்தமான பாதிப்பிற்கு கடலூர் ரேணுகாதேவி மருத்துவரிடமும் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என் தந்தையை நான் பராமரிக்கவில்லை என்றும் அவ்வாறு பராமரித்து இருந்தால் அவருக்கு சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவரை நான் பராமரிக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணங்களை நான் தாக்கசல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தந்தை எந்த தேதியில் இறந்தார் என்றால் 24.02.2008 தேதியில் இறந்தார். அப்போது என் அம்மாவும் அப்பாவுடன் தான் இருந்தார் என்றால் ஆமாம். ஜனவரி மாதம் 2000ம் ஆண்டு தான் என் அப்பாவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல, 2005ம் ஆண்டிற்கு பிறகு தான் என் அப்பாவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. 2000ம்

ஆண்டில் என் தந்தை உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அப்போது நான் அவரிடம் நான் தான் ஆண் வாரிசு என்றும் அதனால் எனக்கு தான் சொத்து முழுவதும் எழுதிவைக்கவேண்டும் என்று கேட்டேன் என்றும் அதற்கு என் தந்தை மறுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் என் தந்தையுடன் சண்டைபோட்டுக்கொண்டு வெளியே வந்துவிட்டேன் என்றும் அதே ஊரில் வேறு ஒரு வீட்டில் தனியாக குடியிருந்தேன் என்றும் சொன்னால் அது பொய். அதன் பிறகு என் சகோதரியும் அவர் கணவருமான பிரதிவாதிகள் தான் என் அம்மாவுடன் சேர்ந்து என் அப்பாவை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, கடைசிவரை என் தந்தையின் இறப்பிற்கு கூட என் சகோதரி வரவில்லை, என் அப்பா கடைசிவரை என் பாராமரிப்பில் இருந்து என் வீட்டில் தான் இறந்தார். என் தந்தை இறந்தபிறகு ஒரு மகன் செய்யவேண்டிய எந்த சடங்கிற்கும் நான் வரவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை இறந்து ஒரு வருடம் கழித்து திவசம் சமயத்தில் தான் நான் செய்த தவறை மன்னிக்கும்படி கேட்டு என் அம்மா மற்றும் சகோதரியுடன் வந்து சேர்ந்தேன் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபோது என் மற்றொரு சகோதரியான பார்வதியும் மற்றொரு உறவினரும் என்னிடம் என் தந்தையின் ஈமசடங்குகளை செய்யும்படி அழைத்த போது நான் மறுத்துவிட்டேன் என்றும் 2ம் பிரதிவாதியான என் சகோதரிதான் ஈம சடங்குகளை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.